2006 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடக் கரையைப் பலப்படுத்துவது, கடந்த சில நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் மூலம் அரசின் கவனத்திற்கு ஈர்க்கப்படுகிறது. 9 பணிகளுக்கு, கிட்டத்தட்ட 19.271 கோடி ரூபாய்க்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, பணி விரைவில் தொடங்குகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 16 கிலோமீட்டர் கொள்ளிடம் கரையைத் தார்ச்சாலைகளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 191 முதல் 193 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–30

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

[2006 ஜனவரி 21

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.